RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22243

OPEN ACCESS

# சங்க புறப்பாடல்களில் கொடை

இல. இலக்கியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, கச்சியப்பமுனிவர் தமிழியல் கல்லூரி, முசிறி, திருச்சி-621211, இந்தியா.

# Autobiographical Novels in Tamil, Malayalam - An Overview

L. Ilakkiya [a, *]

[a] Department of Tamil, Kachiyappa Munivar Tamizhiyal Kalloori, Musiri, Tiruchirappalli-621211, India

* Corresponding Author: ilakkiyakanthan@gmail.com

Received: 03-02-2022
Revised: 09-04-2022
Accepted: 21-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

Among the books of the Sangam age, Ettutogai books have a special place. Among them, Purananooru is noteworthy. In the Ettutokai texts, especially Purananooru, Pathi; The poems like Rupathu etc., are a historical document and a symbol of Tamil culture. The great culture of the Tamils in the Sangam age is evident from the poems. Charity is the foremost of all virtues. Charity is the act of giving money to the needy. The Sangam Tamils protected love and valour with two eyes. However, the poems extol the gift of valour. The word 'give' is 'give| It is derived from the root word. The act of giving takes place in human beings. Gifts may be material, money, food, blood or land. In ancient times, the Tamils cherished the noble virtue of philanthropy.

**Keywords:** Autobiographical Novels, Tamil, Malayalam, literature

## முன்னுரை

சங்ககாலத்தில் தோன்றிய நூல்களில் எட்டுத்தொகை நூல்களுக்குத் தனியிடம் உண்டு. அவற்றுள் புறநானூறு குறிப்பிடத்தக்கது. எட்டுத்தொகை நூல்களில் குறிப்பாக புறநானூறு, பதி;றுப்பத்து முதலான புறப்பாடல்கள் வரலாற்று ஆவணமாகவும், தமிழ் பண்பாட்டின் சின்னமாகவும் அமைந்துள்ளன. சங்ககாலத்தில் ஈகையாகிய கொடைசெய்யும் மாண்பு மேம்பட்டு விளங்கியதைத் தமிழரின் தலைசிறந்த பண்பாடாகப் போற்றப்பட்டதைப் புறப்பாடல்களின் வழி காணமுடிகிறது. அறங்கள் பலவற்றுள்ளும் ஈகையாகிய கொடையறம் முதன்மையானது ஆகும். கொடை என்பது பொருள் அற்றவர்களுக்கு பொருள் தந்து உதவுவது ஆகும். சங்கத் தமிழர் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகப் போற்றிப் பாதுகாத்தனர். எனினும், புறப்பாடல்கள் வீரத்திற்கு இணையாகக் கொடையைச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. கொடை என்றசொல் ‘கொடு| என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்ததாகும். கொடுத்தல் என்னும் செயல் மனிதர்களிடத்தே நிகழ்வது. கொடுப்பவை பொருளாகவோ, பணமாகவோ, உணவாகவோ, குருதியாகவோ, நிலமாகவோ எனப் பல்வேறு வகைகளுள் அமையும். கொடை செய்யும் உயர்ந்த பண்பைப் பண்டைக் காலத்தில் தமிழர்கள் போற்றி வளர்த்தனர்.

## கொடையின் இயல்பு

தொல்காப்பியர் கொடையின் பெருமையைப் பொருளதிகாரத்தில் எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான பெருமிதத்தில் விளக்குகின்றார் இதனை,

“கல்விதறுகண் இசைமை கொடையெனச்

சொல்லப்பட்டபெருமிதம் நான்கே"

என்று குறிப்பிடுகிறார் (Tholkappiyar, 2008). தனிமனிதன் ஒருவன் கொடைசெய்வதால் ஏற்படும் பெருமிதத்தைவிட அரசுரிமை பெற்றமன்னன் கொடை செய்வதைப் பெருமையாகக் கொள்வது வியப்புஒன்றும் இல்லை.

சங்ககாலத்தில் அனைத்துசெயல்களையும் முறையாகச் செய்துவந்தனர். வறியவர்கள் பொருட்செல்வம் உடையவரிடம் வந்து 'யாம் வறியவர்' என்று சொல்வதற்கு முன்பே குறிப்பால் உணர்ந்து, தம்மிடத்திலுள்ள பொருட்செல்வத்தைக் கொடுக்க முற்படுவர்.

## கொடையின் வகைகள்

1.பொன் தாமரைகொடுத்தல்

2.ஊரையே தருதல்

3.அணிகலன்கள் தருதல்

4.யானைகள் கொடுத்தல்

5.பொன்னால் செய்த ஆரம் பொற்கடகம் கொடுத்தல்

6.மணிமாலை பூண்டயானைகள் பொன்னால் செய்யப்பட்ட மாலைகொடுத்தல்

7.நீல மணியைவெள்ளிநாரில் தொடுத்த ஆரம் கொடுத்தல்

8.மாமிசம் கலந்தஉணவுகள் கொடுத்தல்

9.பொன் ஆபரணங்கள் தருதல்

10.உணவு கொடுத்தல் (நெய் கலந்தது)

11.விளை நிலங்கள் தருதல்

12.புத்தாடைகள் தருதல்

13.மதுபானங்கள் தருதல்

14.பாம்பு உரித்ததோல் போன்ற பூவேலைசெய்யப்பட்ட ஆடைகள் தருதல்

15.வெள்ளி நாரால் கோர்க்கப் பெற்ற தாமரைப்பூ மாலையை பரிசாகத் தருதல்

ஆகியவற்றை கொடைஅரசர்கள் பரிசுகளாகத் தன்னை நாடிவந்த புலவர்களுக்குத் தந்தனர்.

## சேரரின் கொடைத்திறம்

உதியன், குட்டுவன், வானவன், வில்லவன், மலையன், பொறையன், கோதை, சேரலன், குடகன், பூழியன் என்னும் பெயர்கள் சேரர்களைக் குறிப்பன.

சங்ககால சேரவேந்தர்களுள் ஒருவரான பெருஞ்சோற்று உதியன் சேரல் போருக்குப் புறப்படுமுன் அரசன் படைவீரர்களை ஊக்குவித்தற் பொருட்டு அவர்களுக்குப் பெருஞ்சோறு அளிப்பது பண்டைக் காலத்து மரபாகும். இதனை,

"பெருஞ்சோறுமிகுபதம் வரையாதுகொடுத்தோய்"

என்ற முரஞ்சியூர் முடிநாகராயரின் பாடலடிகள் ஐவராகிய பாண்டவர்களுக்கும், துரியோதனன் உட்பட நூற்றுவருக்கும் உணவினை இடைவிடாதுகொடுத்துக் கொண்டே இருந்தான் என்ற உண்மையை விளக்குகிறது (Duraisamipillai, 2005a).

குடக்கோ நெடுஞ்சேரலாதன் எனும் மன்னனின் அரண்மனையில் பலகுன்றுகளைக் கடந்துவந்துதங்கள் பசியைத் தீர்த்துக் கொண்ட பரிசிலர்களின் கூட்டத்தினருக்குப் பட்டாடையும், அணிகலனும் பரிசாக வழங்கினான். மேலும், இவனது கைகள் பிறருக்குக் கொடுத்துக் கொடுத்து மிகுந்தவளமை பெற்றிருந்ததனை,

"ஈத்துக் கைதண்டாக் கைகடுந்துப் பின்

புலைவயின் புரைவயின் பெரியநல்கி"

என்ற அடிகளால் சுட்டிக் காட்டப்படுகிறது (Duraisamipillai, 2005b). மேலும், மண்ணுயிரெல்லாம் அழியும்படி பல ஆண்டுகள் மழைபெய்யாமல் பொய்த்தாலும் சேரலாதன் புலவர் விரும்பிய பொருளைத் தராமல் இருக்கமாட்டேன் என்று அவனின் கொடைச்சிறப்பு சுட்டப்படுகின்றது.

நெடுஞ்சேரலாதனிடம் பரிசுபெற்ற பரிசிலன் ஒருவன் அவன்பெற்ற பொருளைக் கொண்டு எல்லோருக்கும் உணவும், பரிசும் அளித்து கள்ளை உண்ணுங்கள், சோற்றை ஆக்குங்கள், இறைச்சியை அறுத்திடுங்கள், பருப்பை அடுப்பில்ஏற்றி வேகவையுங்கள், நம்மைத் தேடிவருபவர்களுக்கு 'இல்லை' என்று சொல்லாமல் உடனே பரிமாற விறலியர் அடுப்பங்கரையில் சமையல் செய்யட்டும், நாம்பெற்ற பொருளை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுங்கள் அதனால் பிழைஇல்லை என்றுபரிசிலன் கூறுவதையும் பதிற்றுப்பத்தின் 18-ம் பாடல் எடுத்துரைக்கிறது. அதன்வழி பரிசுப்பொருளின் பெருக்கமும் உணரப்படுகிறது (Duraisamipillai, 2005b).

கடற்பிறகோட்டிய செங்குட்டுவன் என்னும் மன்னன் வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே குமரிவரையில் உள்ள அரசர்கள் போரிலே தோற்று அழிய, பலநாடுகளின் அழகைக் கெடுத்த போர்த்திறம் உடையவன், பேரியாற்றில் கரை கடந்து வெள்ளம் பெருகுமாறு மழைபொழிவதுபோல, பஞ்சகாலத்திலும் எதிர்பட்டவர்களுக்கு எல்லாம் உணவை வழங்கியவன், இரப்போருக்கு நல்ல அணிகலன்களைத் தருபவனாகத் திகழ்ந்துள்ளான்.

குறையாது வழங்கும் ஈகைக் குணத்தால் உண்டாகும் புகழை விரும்பும் செங்குட்டுவன் இமயமலைபோன்று உயர்ந்த முகப்பட்டம் அணிந்த ஆண்யானையை, பெண் யானையோடும் யானைக் கன்றோடும் பரிசாகத் தருவான் எனும்; செய்தியை பரணர் பாடிய புறநானூற்றுப்பாடல் 369 - ன் வழி அறியமுடிகிறது.

## சோழர்களின் கொடைத்திறம்

வரலாற்றுச் சுவடிகளில் முக்கியத்துவம் பெற்றுவிளங்கும் மூவேந்தருள் நடுவண் என்றசிறப்புடையவன் சோழன். இவர்களது தலைநகரம் உறையூர், கொடி-புலிக்கொடி, பூ - அத்திப்பூ.

உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி எனும் மன்னன் பகைவர்கள் மீது படையெடுத்துப் புறப்படும்போதே வெற்றிதோல்வி நிர்ணயிக்கப்படுவதற்கு முன்பே அந்த எதிரியின் கோட்டையை உனக்குத் தந்தேன் என்று பாணனுக்கு வாக்குறுதி கொடுக்கும் பண்பினனாகத் திகழ்ந்துள்ளான்.

தன்னைப் பாராட்டிப் பட்டினப்பாலை பாடிய புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குக் கரிகாற் பெருவளத்தான் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்ததனைக் கலிங்கத்துப்பரணி(99-101) மூலம் அறியமுடிகிறது. மேலும், கரிகாலனைக் காண்பதற்கு முதல்நாள் மாலையில் வறுமை நிலையில் இருந்த பொருநன், மன்னனைக் கண்டபின்னர் மறுநாள் காலையில் வறுமைநிலை ஒழிந்தது என்பதை பொருநராற்றுப்படை (96-98) பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன (Soma Sundarananr, 2005).

நலங்கிள்ளி எனும் சோழமன்னன் இரக்கமுள்ள மனமுடையவன், அவனைநாடி ஒருவன் பிச்சைப் பாத்திரம் ஏந்தி யாசித்தால் கருவூர் நகரத்தையே தரும் பண்புடையவன். நலங்கிள்ளியைப் பாடிச்சென்றால் சோழனுக்குரிய உறையூரே அன்றிச் சேரனுக்குரிய கருவூரும்,

பாண்டியனுக்குரிய மதுரையும் இணைத்துக் கொடுப்பான் என்று கோவூர்க்கிழார் பாடிய புறநானூறு(32) பாடல்வழி அறியமுடிகிறது.

மேலும், இரவலர் உடுத்தியிருந்த கிழிந்த ஆடையை நீக்கிவிட்டுப் புத்தாடையையும், ஒளிமிகுந்த அணிகலன்களையும் வழங்குவதோடு வடித்துப் பெறப்பட்ட கள்ளையும் உண்ணக்கொடுப்பான் என்பதை புறநானூறு(400) பாடல்வழி அறியமுடிகிறது (Duraisamipillai, 2005a).

குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவன் தன்னைநாடி வருகின்ற பரிசிலர்களுக்குப் பொன்னாலான தாமரைப்பூ மாலையைச் சூட்டி, தேர்களையும் பரிசாக வழங்குவான் என்பதனை ஆலந்தூர்க்கிழாரின் புறம் 69-வது பாடல் உணர்த்துகிறது.

இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி பொருளை வேண்டிவந்த அந்தணர்களுக்குக் குறைவில்லாத செல்வத்தைக் கொடுத்துப் பூக்களால் போற்றி இரவலர்களுக்கு அரிதாகிய பொன்அணிகலன்களைக் குறைவில்லாது வழங்கியதனை புறநானூற்றின் 367-வது பாடல்வழி அறியமுடிகிறது.

## பாண்டியர்களின் கொடைத்திறம்

பாண்டியர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். கொடி-மீன் பொறிக்கப்பட்ட சின்னமாக இருந்தது. மன்னர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேப்பம்பூ மாலை அணிந்தனர்.

பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப் பாடிப் போற்றும் பாணர்களுக்குப் பொன்தாமரை மாலைகளை வழங்கி மலைக்கச் செய்கின்றான். புலவர்கள் அலங்கரிக்கப்பட்ட வெண்புள்ளிகளை உடைய யானையும், தேரும் பெற்றனர்.

கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி எனும் மன்னன் வறுமையுற்றவர்கள் பாண்டியனைத் தேடிவந்தவுடன் அவர்களின் வறுமைநிலை அறிந்துகொடுக்கும் இயல்புடையவன் என்பதனை, இரும்பிடர்த்தலையாரின் புறநானூறு(3) பாடல் உணர்த்துகிறது.

கடலுள் மாய்ந்தபெரும்வழுதி வறுமையில் பீடிக்கப்பட்ட புலவர்களுக்குக் கை நிறையப் பொன்னைத் கொடுக்கும் இயல்பினன் என்பதை பரிபாடல்(10) பாடல்வழி உணரமுடிகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கிடைத்தற்கரிய பொருள்களையெல்லாம், எளிதாகத் தன்வசப்படுத்திக் கொண்டு, தனதாக்கிக் கொண்ட பொருள்களைத் தானே வைத்துக் கொள்ளாது மற்றவருக்கும் வாரி வழங்கும் வள்ளல் ஆவான். எப்பொழுதும் குறைவுபடாத பெருஞ்செல்வ வளம் உடைய பாண்டியன், கொழுத்த இறைச்சிஉணவையும், பலவிதமான சோற்றையும் வெறுத்து வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு இனிக்கும் கள்ளைவிரும்பிஉண்ணுகிறபாணர்க்கூட்டம் மகிழத் தினந்தோறும் விறலியர் வெறும் கைகளில் வளையல் அணியச் செய்தும், நிலம் சுமக்கமுடியாத அளவுபொருட்களையும் பொன்னையும், யானைக் கூட்டத்தையும் தருவான் என்ற செய்தியினை மதுரைக்காஞ்சியின் வழியாக அறியமுடிகிறது.

## கடையெழுவள்ளல்களின் கொடைச்சிறப்பு

பேகன் என்பவர் பொதினிமலைக்குத் தலைவர். தற்போது இந்த இடம் பழனிமலை என்று அழைக்கப்படுகிறது. மழைவளம் மிக்க இந்த மலையின் காட்டில் மயில்கள் திரிந்துகொண்டிருக்கும். ஒருநாள் அப்படித் திரிந்து கொண்டிருந்த ஒருமயில் அகவியதைக் கேட்டு, அதுகுளிரால் நடுங்கி அகவியது என்றுபேகன் நினைத்தார். மயில் குளிரில் இருந்துகாத்துக் கொள்ளதான் அணிந்திருந்த போர்வையை அம்மயிலுக்குப் போர்த்தினார். மயில் போர்வையைப்

போர்த்திக் கொள்ளுமா எனச் சிறிதும் யோசித்துப் பாராமல் இத்தகைய செயல் செய்தார். இதனையே ‘கொடைமடம்’ எனச் சான்றோர் போற்றிக் கூறினர்.

பாரி என்பவர் பறம்பு மலையை ஆண்ட குறுநிலமன்னர். இவரை வேள்பாரி என்றும் வழங்கப்படுகிறார். இவர், தாம் சென்றவழியில், தம் தேரைத் தடுத்த முல்லைக் கொடி, தேரை விரும்பியதாகக் கருதி, அதுபடர்வதற்குத் தனது பெரியதேரையே அளித்தவர்.

திருக்கோயிலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த காரி, கொடை கேட்டு வருபவர்களிடம் எப்போதும் அருள்நிறைந்த சொற்களைப் பேசும் இயல்புஉடையவன். ‘தலையாட்டம்| என்ற அணியைத் தலையிலும், ஒலிக்கும் மணியைக் கழுத்திலும் அணிந்து ஆடுகின்ற குதிரையையும் மற்றும் ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் கொடை கேட்டுவந்தவர்களுக்கு இல்லை என்று கூறாதுவழங்கினான்.

ஆய் என்னும் வள்ளலுக்கு ஒளிபொருந்திய நீலநிறமுள்ள நச்சரவம் ஒன்று இவருக்கு ஓர் அரிய ஆடையை அளித்ததாம். நாகம் நல்கிய ஒளிமிக்க ஆடையை இவர், ஆலமரத்தின் கீழிருந்த செல்வராகிய சிவபெருமானுக்கு அளித்தாராம்.

அதியமான் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டகுறுநில மன்னர் ஆவார். இவர் ஒருகால் தன்நாட்டு மலையொன்றின் உச்சிப்பிளவின் சரிவில் நின்ற அருநெல்லிமரத்தின் அருங்கனி ஒன்றைப் பெற்றார். அக்கனி, தன்னை உண்டாரை நரை, திரை, மூப்பின்றி நீண்டநாள் வாழவைக்கும் வலிமையுடையது. அக்கனியைத் தாமே உண்ணாமல் வைத்திருந்து தம்மைக் காணவந்த நல்லிசைப் புலமைசான்ற ஔவையார்க்கு ஈந்து அழியா அறப்புகழ் பெற்றார்.

நள்ளியை அதிகமலைகள் கொண்ட கண்டீர நாட்டினர் இவரை நளிமலைநாடன் என்றும், கண்டீரக் கோப்பெருநள்ளி என்றும், பெருநள்ளி என்றும் அழைத்தனர். நள்ளிகொடை கேட்டுவந்தவர்களுக்கு இல்லை என்று கூறாது அள்ளிவழங்கினார். மேலும், பின்னர் அவர் வேறொருவரிடம் சென்று கொடை கேட்காத அளவிற்கு கொடை அளித்தார்.

ஓரி- இவர் விற்போரில் வல்லவராதலின், இவ்வள்ளலை ‘வல்வில் ஓரி| என்றும் அழைப்பர். கொல்லிமலை கலைஞர்களுக்கு தனது நாட்டை பரிசளித்தார்.

## முடிவுரை

பழங்காலப் பண்டமாற்று வணிகமுறையிலிருந்தே பரிசளிக்கும் முறை தோன்றியிருக்கக் கூடும். பண்டமாற்றே பின்னர் பரிசில் மாற்றாகவும், பரிசளிப்பாகவும் மாறியிருக்கக்கூடும். சங்ககாலத்தில் அரசர்கள் தாமே செல்வங்களை வாரிவாரி வழங்கி இருக்கின்றனர். தன்னைநாடிவந்த இரவலர்களுக்கு உணவுஉடைகளை நல்கிமகிழ்வித்தனர். பலரோடு வந்துபலநாட்கள் தங்கியிருந்த இரவலர்களும் வறுமை தீர உண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் தம் ஆடல், பாடல்களால் மன்னனையும் மக்களையும் மகிழ்வித்தார்கள். அதனால் அவர்கள் திரும்பிச் செல்கின்றபொழுது அவர்களுக்கு விலைமதிப்பற்ற அணிகலன்களையும், யானை, குதிரை, தேர் முதலிய பொருட்களையும் மன்னன் கொடுத்து அனுப்பினான். அதனால் மக்களை மகிழ்விப்பதே மன்னன் கொடை வழங்கியதற்கான நோக்கமாக இருந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது.

## References

Duraisamipillai, S. (2005) Patirruppattu, Kalaga Veliyedu, Chennai, India

Duraisamipillai, S. (2005a) Purananuru, Kalaga Veliyedu, Chennai, India

Soma Sundarananr, P.V. (2005) Porunaratruppadai, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Tholkappiyar, (2008) Tholkappiyam, Tamil University, Thanjavur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License